[திரு. பொன். முத்துராமலிங்கம்] [1989 மே 11

*(சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 38/1987) மற்றும் ஆளுநர் அவர்கள் அச்சட்ட முன்வடிவு குறித்து அனுப்பிய செய்தி ஆகியவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று சட்டமுன்வடிவு மற்றும் ஆளுநர் அனுப்பிய செய்தி ஆகியவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றன.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பெற்ற 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (முறைப்படுத்துதல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவை (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 38/1987) திரும்பப் பெறவேண்டும்''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு திரும்பப்பெறப்பெற்றது.

(ஔ) பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு **(சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1989) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்''

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, 4 அல்லது 5 சட்டமுன்வடிவுகள் பொது விற்பனை வரி துறையைப் பொறுத்து இருக்கின்றன. எனவே அவைகளை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று முன்மொழிந்த பிறகு விவாதத்தை நாளைக்கு வைத்துக்கொள்ளலாம் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

---

* 11—5—1989 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

** 6—5—89 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று நாளை 12—5—1989 காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை மாலை 6-23 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

158. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 4—8—1987 ஆம் நாளிட்ட 891 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன்வைக்கப் பெற்றது].

159. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 22—7—1988 ஆம் நாளிட்ட 1050 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [0959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

160. வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 18—5—1988 ஆம் நாளிட்ட II/(1)/வ.வ.ச.அ./89/88 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து அத்துறையின் 10—11—1988 ஆம் நாளிட்ட 1412 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

161. எம்.டி.எஸ். 1747 எண்ணுள்ள மோட்டார் வாகனத்திற்காக செலுத்தப்படவேண்டிய வரி மற்றும் அபராதத் தொகை பாக்கியினை ரத்து செய்வது குறித்து உள் துறையின் 12—5—1988 ஆம் நாளிட்ட 1090 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].